தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா – கே.நவாஸ் கனி எம்.பி.–யின்

# சகோதரர் சிராஜுதீன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச. 25-**

**கழக தலைமை நிலையச் செயலாளர் - தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, கே.நவாஸ் கனி எம்.பி. ஆகியோரின் சகோதரர் சிராஜுதீன் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

இச்செய்தி அறிந்ததும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா மற்றும் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி உறுப்பினரும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவரும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலத் துணைத் தலைவருமான கே. நவாஸ் கனி ஆகியோரின் சகோதரர் சிராஜுதீன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

அன்புச் சகோதரரை இழந்து தவிக்கும் துறைமுகம் காஜா, நவாஸ் கனி ஆகியோருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் திருநாளன்று நடைபெறவுள்ள சி.ஏ. தேர்வுகளை

# வேறு தேதியில் நடத்தக்கோரி தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

## இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பினார்!



சென்னை, டிச.25-

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை அன்று நடைபெறவுள்ள சி.ஏ. தேர்வுகளை வேறு தேதியில் நடத்தக்கோரி கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவனம் (ICAI) 2026 ஜனவரி மாதத்தில் நடத்தவுள்ள சி.ஏ ஆரம்ப, இடைநிலை மற்றும் இறுதி தேர்வுகளின் அட்டவணை, பொங்கல் பண்டிகை நடைபெறும் அதே சமயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இது பல மாணவர்களால் சுட்டிக்காட்டிய பின்பும் எந்த மறுபரிசீலனையும் நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் ஜனவரி 14 (போகி), 15 (பொங்கல்), 16 (திருவள்ளுவர் நாள்), 17 (உழவர் திருநாள்) ஆகிய நாள்கள் பண்டிகை நாள்களாக இருக்கும் நிலையில், தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் குடும்ப விழாக்கள், பயணத்திட்டங்கள் மற்றும் தேர்வு தயாரிப்பில் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

ஜனவரி 14 அன்று மட்டும் பண்டிகைக்காக தேர்வு இல்லை என ஐசிஏஐ அறிவித்துள்ள போதிலும், முழு பொங்கல் விடுமுறை காலத்தைத் தவிர்க்காமல் தேர்வுகள் தொடர்வது மாணவர்களிடையே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனை தொடர்ந்து, இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவனத்தின் (ICAI) தலைவர் சரண்ஜோத் சிங் நந்தா அவர்களுக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதி, ஜனவரி 2026 சி.ஏ. தேர்வு அட்டவணையை மறுபரிசீலனை செய்து, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை விடுமுறை காலத்துடன் எதிர்ப்படாமல் வேறு தேதியில் நடத்தக்கோரி வலியுறுத்தியுள்ளார்.

அவரது கடிதத்தில், தற்போதைய ஐசிஏஐ அட்டவணையின்படி, பொங்கல் (ஜனவரி 15,2026) அன்றும் அதைத் தொடர்ந்து திருவள்ளுவர் தினம் (ஜனவரி 16), உழவர் திருநாள் (ஜனவரி 17) ஆகிய அரசு விடுமுறை நாட்களுடன் முக்கிய தேர்வுகள் அமைந்துள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் கலாச்சார, சமய மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளு டன் தொடர்புடையவை என்பதால், இப்பகுதிகளைச் சேர்ந்த விண்ணப்பதா ரர்கள் தேர்வு மையங்களுக்கு பயணம் செய்வதிலும், தேர்வில் கலந்துகொள்வதிலும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொங்கல் பண்டிகைக்கு முன்பும் பின்பும் தேர்வுகள் அடுத்தடுத்து அமைந்திருப்பதால் தென்னிந்திய மாணவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, அட்டவணையை மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளார். இத்தகைய மாற்றம் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் நியாயமான, சமமான தேர்வு வாய்ப்புகளை உறுதி செய்யும் என்றும், தென்னிந்திய மாநிலங்களின் கலாச்சாரங்களுக்கு உணர்வுபூர்வமான அணுகுமுறையை வெளிப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த மாற்றம் சார்ட்டர்ட் அக்கவுண்டன்சி தொழிலில் ஆர்வமுள்ள தென்னிந்திய மாணவர்களின் கனவுகளுக்கு மதிப்பளிக்கும்" என்றும் தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார். இந்தக் கோரிக்கைகளை ஐசிஏஐ பரிசீலித்து, விரைவில் பதிலளிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில்

# 979 இடங்களில் புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் திருத்தம் மேற்கொள்ளும் பணி!

## வாக்குச்சாவடி நிலை அலுவலர் நியமனம்!

*சென்னை, டிச.25-*

*சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் அமைந்துள்ள 979 இடங்களிலும் 23.12.2025 முதல் 18.1.2026 வரை அனைத்து நாட்களிலும் (பண்டிகை நாட்கள் நீங்கலாக) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான படிவங்களை வழங்கிடவும், பூர்த்தி செய்து படிவங்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு இடத்திலும். ஒரு வாக்குச் சாவடி நிலை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் அமையப்பெற்ற 979 இடங்களிலும் 23.12.2025 முதல் 18.01.2026 வரை அனைத்து நாட்களிலும் (பண்டிகை நாட்கள் நீங்கலாக) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை புதிதாக வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான படிவங்களை வழங்கிடவும், பூர்த்தி செய்து படிவங்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு இடத்திலும். ஒரு வாக்குச் சாவடி நிலை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*தற்போது வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு வார்டு அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் இணைய தளத்திலும் (VOTERS' SERVICE PORTAL) பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம்.*

*இதனைப் பார்வையிட்டு வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கானப் படிவங்களை இங்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலைஅலுவலரிடம், படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கிடலாம்.*

*இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டு மைய எண் 1913ல் தொலைபேசியின் வாயிலாக கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.*

### தி.மு.க. மகளிர் அணி

# கோவை வடக்கு மாவட்ட தலைவர், துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு கோவை வடக்கு மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே மகளிர் அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்ட ராணி அவர்கள் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **பி. மலர்விழி** (1டி, மேற்கு சித்திரைசாவடி, உலியம்பாளையம், தீனம்பாளையம் அஞ்சல், தொண்டாமுத்தூர் மெயின் ரோடு, கோவை 641109) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார். மேலும், துணை அமைப்பாளர்களாக,

1. **கி. சாவித்திரி**
   10/44, மாரியம்மன் கோவில் வீதி,
   பூச்சியூர், என்.எஸ்.என். பாளையம்,
   கோவை - 641031
2. **எம். உமா மூர்த்தி**
   38, வெள்ளிப்பாளையம் ரோடு,
   மேட்டுப்பாளையம் - 641301,
   கோவை. ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை–18.
நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பொன்னன் குப்பம் துத்திப்பட்டு சாலையை ரூ5.43கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

### தி.மு.க. மகளிர் அணி

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக திருமதி. **ஆர். கலைவாணி** (19, காமராஜ் நகர், 2வது தெரு, கே.ஏ.பி. திருமண மண்டபம் பின்புறம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

2026 – புதுச்சேரி தேர்தல்! ஆர்.சிவா – ஏ.எம்.எச்.நாஜிம் உள்பட

# புதுச்சேரி கழக நிர்வாகிகள் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் நேரில் ஆலோசனை!

## அமைச்சர் கே.என்.நேரு – ஆர்.எஸ்.பாரதி உடனிருந்தனர்!





சென்னை, டிச. 25-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை எதிர்வரும் 2026- புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் ஆர்.சிவா, எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநிலக் கழக அமைப்பாளர் ஏ,எம்.எச்.நாஜிம், எம்.எல்.ஏ., மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (23-12-2025) காலை, புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் ஆர்.சிவா, எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநில தி.மு.க. அமைப்பாளர் ஏஎம்எச். நாஜிம், எம்.எல்.ஏ., மற்றும் புதுச்சேரி மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ புதுச்சேரி மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத், எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.நாக தியாகராஜன், எம்.எல்.ஏ., ஆகியோர் நேரில் சந்தித்து, எதிர்வரும் 2026-ல் நடைபெற உள்ள புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினர். அதுபோது கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம் –

# எரகனஹள்ளி கிராமத்தில் யானை தாக்கி மருத்துவமனையில் சிகிச்சை!

## ஆறுதல் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவிப்பு!

சென்னை, டிச.25-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், எரகனஹள்ளி கிராமத்தில் காட்டு யானை தாக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், எரகனஹள்ளி கிராமத்தில் வசித்துவரும் ஆள்மாதன் (வயது 60) என்பவர் கடந்த 13.12.2025 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் வீட்டிற்கு அருகே காட்டு யானை தாக்கியதில் படுகாயம் அடைந்து கர்நாடக மாநிலம், மைசூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.


காட்டு யானை தாக்கியதில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆள்மாதன் அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர் விரைவில் நலம்பெற விழைகிறேன். மேலும், சிகிச்சை பெற்றுவருபவரின் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்யும் வகையில் அவரது குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார்.

2025–26ஆம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான

# பொதுக் கலந்தாய்வில் கலந்துகொள்ள 5.01.2026 வரை விண்ணப்பிக்கலாம்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!



சென்னை, டிச.25–

உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி 2025–26ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொதுக் கலந்தாய்விற்கு (General Counselling) இணையவழியில் 24.12.2025 முதல் 05.01.2026 வரை விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உயர் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி 2025–26ஆம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடத்திட ஆணை யிடப்பட்டுள்ளது.

அதன்படி, உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் கள், நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு 2025–26ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்விற்கு (General Counselling) 24.12.2025 முதல் 05.01.2026 வரை இணையவழி வாயிலாக விண்ணப்பிக்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

இந்த பொது கலந்தாய்வில் கலந்துகொள்ள கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள பணியாளர்கள் www.dcetransfer.in மற்றும் www.nonteaching.dcetransfer.in என்ற இணையதள முகவரியிலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள பணியாளர்கள் www.tndotetransfer.in என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இளந்திரையன் அவருக்கு பதிலாக

**அ. அபு (எ) மஹபூப் அலி** (67/6, பி.சி. பழைய மார்க்கெட் தெரு, முகமதுபுறா, சேலம் - 1) அவர்கள் சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள் : 24.12.2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை




விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை வடக்கு ஒன்றியம், கடையம் ஊராட்சிகளில் உள்ள வாக்குச் சாவடி எண் 8 என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குசாவவடி பரப்புரையை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி துவக்கி வைத்து சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை வழங்கி 2026 தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் R.முருகன், அரசு வழக்கறிஞர் பொன். கோபு, ஏழுமலை, நடராஜன், கணேசன், பொன்.குமார், விஜயகுமார், வீரன், சூர்யா, ராஜவேல், ஆறுமுகம், பாலு, பாக நிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.